# 2018 ஜூன் அமாவாசை சாட்சிகள்



**1. எரலூர் - அமுதா** எனது தம்பி ஜானகிராமனுக்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட்டது. மிகவும் கஷ்டப்பட்டோம், பணமும் இல்லை, உயிர் பிழைப்பது கஷ்டம் என்று சொல்லிவிட்டார்கள். எம்மாவுஸ் ஆண்டவரிடம் அழுது கண்ணீரோடு செபித்தோம். எனது தம்பிக்கு குணம் கிடைத்தது. எனது பேரப்பிள்ளைகளுக்கு தாய், தந்தை இருவருமே இல்லை 10,12ம் வகுப்பு படித்தார்கள். இருவரும் தேர்ச்சி பெற வேண்டும் என்று செபித்தேன். தேர்ச்சி பெற்றார்கள். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**2. ஒதியத்தூர் - ஷீலா**

எனது தந்தைக்கு Heart-ல் Block இருந்தது. அறுவை சிசிக்சை செய்ய தந்தை மிகவும் பயந்தார். பணமும் இல்லை. அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து தந்தை பிழைக்க வேண்டும் என்று செபித்தேன். என் தந்தைக்கு உயிர் பிச்சை கொடுத்த ஆண்டவருக்கு நன்றி!



**3. நெய்வேலி - P. சகாயராஜ்** என் மகளுக்கு 4 வருடமாக குழந்தை இல்லை. போர் போட்டும் தண்ணீர் வரவில்லை. வீடு கட்ட முடியாமல் இருந்தது. நான் தீய பழக்கங்களுக்கு ஆளாகி கெட்ட நண்பர்களோடு சேர்ந்து குடிப்பழக்கத்திற்கு ஆளானேன். எம்மாவுஸ்க்கு வந்தேன். எம்மாவுஸ் ஆண்டவரிடம் செபித்தேன். எனது அனைத்து குறைகளையும் தீர்த்து வைத்தார். என் மகளுக்கு குழந்தை பிறந்தது. போரில் தண்ணீர் கிடைத்தது. வீடு கட்டி முடித்துவிட்டோம். நான் தீய பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று விட்டேன். எம்மாவுஸ் ஆண்டவருக்கு கோடான கோடி நன்றி.



**4. காந்தலவாடி - மகாலெட்சுமி** நான் ஒரு இந்து மத சகோதரி. எனக்கு திருமணம் நடைபெற்று குழந்தை இல்லாமல் இருந்தது. எம்மாவுஸ் ஆண்டவரிடம் செபித்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று சொன்னார்கள். எம்மாவுஸ் ஆண்டவரிடம் கண்ணீரோடு செபித்தேன். குழந்தை பிறந்து நன்றி கூற வரும்போது குழந்தை எத்தனை கிலோ எடை இருக்கிறதோ, அத்தனை கிலோ காயின் தருவதாக செபித்தோம். குழந்தை பிறந்தது எம்மாவுஸ் ஆண்டவருக்கு கோடான கோடி நன்றி 7 கிலோ 900 கிராம் காசை காணிக்கையாக கொடுக்கிறோம்.

ஆண்டவராகிய உம்மை எதிர்ப்பவர் எவரும் இலர் (எஸ் 4:17C)



**5. அதனூர் - பானுமதி**

என் குடும்பத்தில் 4,00,000 க்கு மேல் கடன் இருந்தது. எப்படி கடனை கட்டுவது என்று மிகவும் கஷ்டப்பட்டோம். எம்மாவுசுக்கு வந்து ஒவ்வொரு மாதமும் அமாவாசை செபத்தில் செபித்தேன். கடன் பிரச்சனை முழுவதுமாக முடிந்துவிட்டது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு கண்ணீரோடு நன்றி சொல்கிறேன்.

**6. ஆற்காடு - உபகாரமேரி**



எனக்கு 6 முறை பாம்பு கடித்து சரியானது. போன வாரம் வண்டு கடித்துவிட்டது. உடனே மாரடைப்பு ஏற்பட்டது. எனக்கு கணவரும் இல்லை. என் பிள்ளைகள் மருத்துவமனையில் சேர்த்தார்கள். எனக்கு உடல்நிலை மோசமாகிவிட்டது. அப்போது நான் எம்மாவுஸ் ஆண்டவரிடம் செபித்தேன். என் பிள்ளைகளுக்கு தந்தையும் இல்லை. தாயும் இல்லாமல் அனாதைகளாக போய்விடக்கூடாது என் உயிரை காப்பாற்றும் என்று செபித்தேன். அற்புதமாக உயிர் பிச்சை கொடுத்த ஆண்டவருக்கு நன்றி.




**7. ஆனைவரி - புதுமைராக்கினி.** மாட்டுக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. மருத்துவரிடம் காண்பித்தோம். சரியாகவில்லை எம்மாவுசிலிருந்து வாங்கிச் சென்ற எண்ணெயை தடவிவிட்டேன், உப்பை தண்ணிரில் ஊற்றி குடிக்க வைத்தேன். உடனே சரியாகிவிட்டது. அற்புதம் செய்த ஆண்டவருக்கு நன்றி.

**8. கோ.பவளங்குடி - அடைக்கலமேரி**



எங்களுடைய நிலத்தை பக்கத்து வீட்டில் அடமானம் வைத்தோம். அந்த நிலத்தை எங்களிடம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி சண்டை போட்டார்கள். எம்மாவுஸ் ஆண்டவரிடம் உருக்கமாக செபித்தேன். செபித்துவிட்டு வீட்டிற்கு சென்றேன். அவர்களாகவே வந்து நிலத்தை கொடுத்துவிட்டார்கள். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.

ஆண்டவரே நாங்கள் உயிர்வாழ்ந்து உமது பெயரைப் புகழ்ந்து பாடும் பொருட்டு எங்கள் அழுகையை மகிழ்ச்சியாக மாற்றுவீர். (எஸ் 4:17h)




**9. வீரபெருமாநல்லூர் - சங்கர்** வயிற்றில் புண், காலில் குடைச்சல் இருந்தது. அமாவாசை செபத்திற்கு வந்து செபித்தேன். எண்ணெய் வாங்கி தடவினேன். சரியானது. இந்த மாதம் அமாவாசைக்கு வருவதற்கு பணம் இல்லை. போக முடியவில்லையே என்று கவலையோடு இருந்தேன். என் மனைவி எம்மாவுசுக்கு வந்தாலே திட்டுவார்கள். சண்டை போடுவாள். அன்றைய தினத்தில் ஏன் எம்மாவுசுக்கு போகவில்லை என்று கேட்டார்கள். உனக்கென்ன நீ ஏன் கேட்கிறாய்? உனக்கு தான் பிடிக்காதே? என்றேன். என்னிடம் பணம் இல்லை போகவில்லை என்றேன். உடனே என் மனைவி பக்கத்து வீட்டில் போய் பணம்

**10. சாத்திபட்டு - துரைராஜ்**



எனது அம்மா பள்ளத்தில் விழுந்து இடுப்பில் எலும்பு முறிந்து விட்டது. அறுவை சிகிச்சை இல்லாமல் குணம் பெற வேண்டும் என்று எம்மாவுஸ் ஆண்டவரிடம் செபித்தேன். அதேபோல் எனது அம்மாவின் உடல்நிலை அறுவைசிகிச்சை இல்லாமல் குணம் அடைந்தது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**11. உடையார்குப்பம் - மார்டீன்** கரும்பு சரியான முறையில் விளைச்சல் இல்லாமல் இருந்தது. எப்படி கடன் கொடுப்பது என்று தெரியாமல் எம்மாவுஸ் ஆண்டவரிடம் செபித்தேன். விளைச்சல் நன்றாக விளைந்தது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றியாக ரு.1000 செலுத்துகிறேன்.

**எம்மாவுஸ் ஆன்மீக மையத்தின் நிகழ்வுகளை அறிந்துக் கொள்ளவும், உங்கள் ஜெப விண்ணப்பங்களையும், கருத்துக்களையும் எங்களுக்கு தெரியப்படுத்தவும் பயன்படுத்துங்கள் எம்மாவுஸ் ஆன்மீக மையத்தின் இணையதளத்தை**

**இணையதள முகவரி :**

**www.emmausspiritualitycentreindia.com**

**மின்னஞ்சல் முகவரி : emmausspiritualitycentretn@gmail.com**

**முகநூல் முகவரி : Emmaus Spirituality Centre**